# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:101** **தேதி:-21.05.2016**

## மத்திய, மாநில சங்க செய்திகள்

**BSNL ஊழியர் சங்கத்திற்கு முதன்மை அங்கீகார சங்க அந்தஸ்து வழங்கப்பட்டது:-** 2016 மே மாதம் 10ஆம் தேதி நடைபெற்ற 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு தேர்தல் முடிவுகள் வெளியானதை தொடர்ந்து 19.05.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்திற்கு முதன்மை அங்கீகார சங்க அந்தஸ்து வழங்கப்படுவதற்கான உத்தரவினையும், அதற்கான சலுகைகளை வழங்கும் உத்தரவினையும் கார்ப்பரேட் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

**கவுன்சில் உறுப்பினர்கள் எண்ணிக்கை:-** 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு முடிவுகள் வெளியானதை தொடர்ந்து பெறப்பட்ட வாக்கு எண்ணிக்கை அடிப்படையில், தேசிய, மாநில மற்றும் தலமட்ட கவுன்சில்களில் BSNL ஊழியர் சங்கத்திற்கு 9 உறுப்பினர்களும், NFTE சங்கத்திற்கு 5 உறுப்பினர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**BSNLன் புத்தாக்கத்திற்கு ஒரு நற்செய்தி:-** பணப்பற்றாக்குறையால் தவித்துக் கொண்டு இருக்கும் BSNL நிறுவனத்திற்கு வருமான வரித்துறையிலிருந்து 4900 கோடி ரூபாய்கள் திரும்ப கிடைத்துள்ளது. இது BSNL மற்றும் வருமான வரித்துறைக்கும் இடையே நடைபெற்று வந்த தாவாவில் ஏற்பட்டிருக்கும் ஒரு நல்ல திருப்பம். அதே போல மொபைல் சேவைகள் மூலமாக BSNLன் வருமானம் ஏப்ரல் மாதத்தில் 9% உயர்ந்துள்ளது என்பதும் மற்றொரு மகிழ்வு தரும் செய்தி.

**07.06.2016க்கு முன் மாவட்ட செயற்குழுக்கள்:-** 19.05.2016 அன்று டெல்லியில் கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் மையக்கூட்டத்தில், 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் முடிவுகளை மாவட்ட மட்டங்களில் தான் மிகச்சரியாக பரிசீலிக்க முடியும் என்பதால் BSNL ஊழியர் சங்கத்தின் அனைத்து மாவட்ட செயற்குழுக்களையும், 07.06.2016க்கு முன் கூட்டி மாவட்ட செயலாளர்கள் தேர்தல் முடிவுகளை பரிசீலித்து மாநில சங்கங்களுக்கு ஒரு குறிப்பு அனுப்ப வேண்டும் என்றும், அவற்றை தொகுத்து மாநில சங்கங்கள் மத்திய சங்கங்களுக்கு ஒரு குறிப்பு அனுப்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மாவட்ட சங்கங்கள் 07.06.2016க்கு முன் மாவட்ட செயற்குழுக்களை கூட்டி விவாதித்து அறிக்கையினை மாநில சங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது. அந்த செயற்குழுக்களில் மாவட்ட மாநாடு நடத்துவது தொடர்பாக திட்டமிட வேண்டும் என்றும் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**10.06.2016 அன்று விரிவடைந்த மாநில செயற்குழு:-** தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழு 10.06.2016 அன்று காலை சரியாக 10.00 மணி அளவில் தூத்துக்குடியில் நடைபெற உள்ளது. அந்தக் கூட்டத்தில் மாநில சங்க நிர்வாகிகள், மாவட்ட

செயலாளர்கள், கிளை செயலாளர்களோடு அனைத்து மாவட்ட சங்க நிர்வாகிகளும் பங்கேற்க வேண்டும். அன்று மாலை நமது வெற்றி விழா கூட்டமும், 7ஆவது அகில இந்திய மாநாட்டு வரவேற்புக் குழு அமைக்கும் நிகழ்வும் நடைபெறும். தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**ஜூலை18-20 வரை மத்திய செயற்குழுக் கூட்டம்:-** 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் முடிவுகளை பரிசீலிப்பதற்கான மத்திய செயற்குழுக் கூட்டம் புது டெல்லியில் ஜூலை 18 முதல் 20 வரை நடைபெற உள்ளது.

**JAO LICE தேர்வு எழுதுவதற்கான தகுதி தேதியினை மாற்றி அமைக்க வேண்டும்:-** JTO LICE தேர்வு எழுதுவதற்கான தகுதிக்கான தேதி ஜூலை 1 என இருக்கும் போது JAO LICE தேர்வு எழுதுவதற்கான தகுதிக்கான தேதி ஜனவரி 1 என உள்ளதை சுட்டிக்காட்டி அதனையும் ஜூலை 1ஆம் தேதி என மாற்ற வேண்டும் என நமது மத்திய சங்கம் மீண்டும் ஒரு நினைவூட்டும் கடிதத்தை மனிதவள இயக்குனருக்கு எழுதியுள்ளது.

**2013ல் நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை:-** 18.05.2016 அன்று GM(Rect) திருமிகு அனிமா ராய் அவர்களை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி மற்றும் SNATTA சங்கத்தின் துணை பொது செயலாளர் தோழர் சுனில் கௌதம்ஆகியோர் சந்தித்து 2013ஆம் ஆண்டு நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான பதில் உள்ள கேள்விகளுக்கு கூடுதல் மதிப்பெண் வழங்கி மறு பரிசீலனை செய்வதற்கான வழிகாட்டுதல்களை மாநில தலைமை பொது மேலாலர்களுக்கு அனுப்ப வேண்டும் என வலியுறுத்தினர். உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக GM(Rect) உறுதி அளித்துள்ளார்.

**JTO LICE தேர்வுகளில் எதிர்மறை மதிப்பெண் முறையினை நீக்கிடுக:-** JTO LICE தேர்வுகளில் தவறான விடைகளுக்கு மதிப்பெண்களை குறைக்கும் முறையான எதிர்மறை மதிப்பெண் முறையினை கைவிட வேண்டும் என BSNL ஊழியர் சங்கமும், SNATTAவும் ஏற்கனவே நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியிருந்தன. அதன தொடர்ச்சியாக 16.05.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி மற்றும் SNATTA சங்கத்தின் துணை பொது செயலாளர் தோழர் சுனில் கௌதம் ஆகியோர் GM(Rect) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்து விவாதித்தனர். இதனை பரிசீலிப்பதாக கூறிய GM(Rect), இது ஒரு கொள்கை முடிவு என்பதால் அதனை பொருத்தமான நிர்வாகியால் (COMPETENT AUTHORITY) மட்டுமே முடிவு எடுக்க முடியும் என்பதையும் தெரிவித்தார்.

**EXCESS PAYMENT பிடித்தத்தை நிறுத்துவதற்கான DOP&T உத்தரவை அமுலாக்குக:-** கடந்த காலத்தில் வழங்கப்பட்ட EXCESS PAYMENTஐ பிடித்தம் செய்யக்கூடாது என்கின்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் DOP&T உத்தரவு வெளியிட்டுள்ளது. ஆனால் இதுவரை கார்ப்பரேட் அலுவலகம் இதற்கான உத்தரவை வழங்கவில்லை. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் பல்பீர்சிங் மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி DGS ஆகியோர் GM(Estt) திருமிகு மது அரோராஅவர்களை சந்தித்து இந்த உத்தரவை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்கள். ஆனால் DOP&T உத்தரவினை DOT இன்னமும் ENDORSEMENT செய்யவில்லை என GM(Estt) தெரிவித்தார். DOTயிலிருந்து ENDORSEMENT பெறும்

பணியினை கார்ப்பரேட் அலுவலகம் விரைவுபடுத்த வேண்டுமென தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

**இரவு நேர இலவச அழைப்புகள் திட்டத்தை BSNL ஊழியர்களுக்கும் ஓய்வூதியதாரர்க்கும் விரிவுபடுத்துக:-** BSNLல் பணியாற்றும் ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்க்கும், இரவு நேர இலவச அழைப்புகள் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கையினை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்வதாக தேசிய கவுன்சில் கூட்டத்தில் நிர்வாகம் அறிவித்திருந்தது. ஆனால் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக நமது அகில இந்திய சங்கத்தின் சார்பாக பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் பல்பீர்சிங் மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி DGS ஆகியோர் GM(Admn) திரு S.K.சின்ஹா அவர்களை சந்தித்து தேசிய கவுன்சில் கூட்டத்தில் ஏற்றுக் கொண்ட விஷயத்தை அமுலபடுத்துவதில் தாமதம் செய்யக்கூடாது என வலியுறுத்தினர். கார்ப்பரேட் அலுவலகத்தில் இது தொடர்பாக ஆய்வு செய்து வருவதாக GM(Admn) தெரிவித்தார். அதனை விரைவுபடுத்த வேண்டும் என தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

**GPF முன்பணத்திற்கான நிதி:-** GPF முன்பணத்திற்கான நிதி இது வரை எந்த மாநிலத்திற்கும் அனுப்பப்படாதது குரித்து நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் GM(T&BPC)யுடன் 20.05.2016 அன்று விவாதித்துள்ளார். கார்ப்பரேட் அலுவலகத்தில் நிதிப்பற்றாக்குறை காரணமாக இதற்கான நிதி வழங்கப்படவிலை என அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக DIRECTOR(FIN) உடன் நமது பொது செயலாளர் விவாதித்துள்ளார். அவரும் விரைவில் நிதி ஒதுக்கீடு செய்ய முயன்று வருவதாக தெரிவித்துள்ளார்.

**மனிதவள இயக்குனருடன் சந்திப்பு:-**

20.05.2016 அன்று . BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் பல்பீர்சிங் மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி DGS ஆகியோர் DIRECTOR(HR) திருமிகு சுஜாதா ரே அவர்களை சந்தித்து கீழ்கண்ட விஷயங்களை விவாதித்தனர்.

1) **ஜாம்ஷெட்பூர் மாவட்ட செயலாளர் பழிவாங்கும் மாற்றல்:-** BSNL ஊழியர் சங்கத்தின் ஜாம்ஷெட்பூர் மாவட்ட செயலாலர் தோழர் ராம்நரேஷ் பிரசாத் அவர்களை கார்ப்பரேட் அலுவலக உத்தரவுக்ளுக்கு மாறாக தும்கா மாவட்டத்திற்கு பழிவாங்குதல் நடவடிக்கையாக மாற்றல் செய்யப்பட்டுள்ளார். இந்த மாற்றல் ரத்து செய்யப்படவேண்டும்.

2) **வாரணாசி மாவட்டத்தில் பழிவாங்குதல்கள் களையப்படவேண்டும்:-** பல வருடங்களுக்கு முன்பு வாரணாசி மாவட்டத்தில் உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் 21 உறுப்பினர்கள் மீது தவறாக FIRகள் போடப்பட்டுள்ளது கார்ப்பரேட் அலுவலகம் மற்றும் மாநில நிர்வாகங்களின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக வாரணாசி மாவட்ட நிர்வாகம் செயல்பட்டு வருவது சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்கனவே ஏற்றுக் கொண்டபடி இந்த FIRகள் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

3) **அனாமலிகளின் தீர்வில் தேவையற்ற காலதாமதம்**:- மாநிலங்களில் இருந்து தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை என்ற காரனத்தை சொல்லி அனாமலிகளின் தீர்வை கார்ப்பரேட் அலுவலகம் தீர்க்காமல் வைத்துள்ளது. இதில் தலையிட்டு முட்டுக்கட்டையை நீக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மனித வள இயக்குனரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

4) **இலாகா தேர்வுகளில் SC/STஊழியர்களுக்கு மதிப்பெண் தளர்த்துவதில் DOP&T உத்தரவை அமுலாக்காமல் இருப்பது:-** DOP&T உத்தரவுகளை அமுலாக்குவதற்காக கார்ப்பரேட் நிர்வாகத்தால் நியமிகப்பட்ட கமிட்டியின் பரிந்துரைகள் இன்னமும் அமுலாக்கப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டது. DOP&T உத்தரவுகளை முழுமையாக அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

5) **ஆந்திர மாநில JTO LICE 2013 தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்க:-**ஆந்திர மாநில உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதால் கார்ப்பரேட் அலுவலகம் JTO LICE 2013 தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என வெளியிட்ட உத்தரவினை ஆந்திர மாநில நிர்வாகம் அமுலாக்கவில்லை எனதை தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நீதிமன்ற வழக்குகள் திரும்ப பெறப்பட்டு கார்ப்பரேட் அலுவலகத்தின் உத்தரவுகளை அமுலாக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

6) **ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான பதில்கள் உள்ள கேள்விகளுக்கு முழு மதிப்பெண்கள் வழங்குக:-** மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் தீர்ப்பின் அடிப்படையில் ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான பதில்கள் உள்ள கேள்விகளுக்கு முழு மதிப்பெண்கள் வழங்கி 2013 JTO LICE தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே கோரியிருந்தது. அது அமுலாக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

7) **GPF முன்பணத்திற்கான நிதி ஒதுக்கீடு**:- GPF முன்பணம் வழங்குவதற்காக எந்த ஒரு மாநிலத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை நமது தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மேலும் காலதாமதமின்றி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலே சொல்லப்பட்ட அனைத்து விஷயங்களிலும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக DIRECTOR(HR) உறுதி அளித்தார். SC/STஊழியர்களுக்கு மதிப்பெண் தளர்த்துவதற்கான DOP&T உத்தரவுகளை அமுலாக்குவதற்காக கார்ப்பரேட் நிர்வாகத்தால் நியமிகப்பட்ட கமிட்டியின் பரிந்துரைகளுக்கு நிர்வாகக் குழு ஒப்புதல் வழங்க வில்லை என DIRECTOR(HR) தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டிருந்த GM(SR) திரு A.M.குப்தா அவர்கள் இந்த பிரச்சனைகள் அனைத்தையும் தீர்வு காண அனைத்து செக்ஷன்கள் மற்றும் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கண்காணிப்பார் என DIRECTOR(HR) தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**